# DEPOSITION OF WITNESS

(See Rule 42)

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF Fast Track Court (At Magistrate Level )**

**PATTUKKOTTAI**

| | |
|---|---|
| **STC. No.** | **187/2025** |
| **பெயர்: PW-1** | **இளவரி** |
| **தந்தை பெயர் :** | **செல்வராஜ்** |
| **வயது:** | **31/2026** |
| **ஊர்:** | **காமாட்சி நாயுடு பாளையம், பட்டுக்கோட்டை** |
| **தாலுக்கா** | **பட்டுக்கோட்டை** |
| **வேலை** | **ஆசிரியர்** |

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் 03:01 pm**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**
**எதிரி ஆஜர்.**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலரான திருமதி. N.Usha , (உதவியாளர்) என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

1. நான் Bon sacers (பான் சேக்கர்ஸ்) பள்ளியில் ஆசிரியராக பணியாற்றுகிறேன், பத்தாம் வகுப்பு வரை பாடம் எடுக்கிறேன். நான் இயற்பியல் வகுப்பு மட்டும் எடுப்பேன்.

2. நான் முதன்முதலில் எந்த பள்ளியில் ஆசிரியராக இருந்தேன் என்றால், விநாயகா மேல்நிலைய பள்ளி (CBSE) மதுக்கூரில் இருந்தேன். விநாயகா மேல்நிலைய பள்ளி (CBSE) –ல் தான் எதிரி Principal –ஆக இருந்தாரா என்றால், சரிதான். பள்ளியில் ஆசிரியராக பணியாற்றுவதற்கு தகுதியான படிப்பான B.Ed அல்லது Bachelor of Teaching படித்துள்ளேனா என்றால், இல்லை. நான் பொறியியல் பட்டதாரி என்பதாலும், நான் B.Ed அல்லது Bachelor of Teaching படிப்பு ஏதும் படிக்காததால் எனக்கு பள்ளியில் ஆசிரியராக பணியாற்ற தகுதி இல்லை என்றால், சரியல்ல, அரசாணை இருக்கிறது பொறியியல் பட்டதாரியும் பள்ளியில் ஆசிரியராக இருக்கலாம் என்று உள்ளது. எனக்கு இடைநிலை,

மேல்நிலை, உயர்நிலை என்ற கல்வி நிலைக்கு வித்தியாசங்கள் தெரியாது என்றபோதிலும்,. எதிரியானவர் தன் செல்வாக்கை பயன்படுத்தி என்னை ஆசிரியராக பணியமர்த்தினார் என்று சொன்னால், சரியல்ல.

3. என்னை நேர்காணல் யார் செய்தார் என்றால், பள்ளி நிர்வாகம், அதில் இருந்த நிர்வாகிகள் பெயர் எனக்கு தெரியாது. நான் 1 வருடம் விநாயகா மேல்நிலையப் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றினேன், அதன்பின்னர் புதுக்கோட்டையில் South spring international school –ல் பணியாற்றினேன். எதிரியானவர் விநாயகா மேல்நிலையப்பள்ளியை விட்டுவிட்டு புதுக்கோட்டையில் South spring international school –க்கு சென்று எதிரி சென்றுவிட்டார் என்றும், அதன்பின் நானும் புதுக்கோட்டையில் South spring international school –க்கு சென்றுவிட்டேன் என்று சொன்னால், சரிதான்.

4. புதுக்கோட்டையில் South spring international school –ல் எதிரியானவர் என்ன வேலை பார்த்தார் என்றால், தலைமையாசிரியராக பணியாற்றினார். அந்த பள்ளியில் எதிரிக்கு தங்குவதற்கு வீடு கொடுத்தார்கள் என்றால், சரிதான். எதிரி தங்கிய வீட்டில்தான் நானும் தங்கினேன் என்று சொன்னால், சரிதான். அந்த வீட்டில் 1. சண்முகசுந்தரம், 2.மகேஸ்வரன் 3. நான் மற்றும் எதிரியும் தங்கினோம். அந்த வீட்டிற்கான வாடகையை எதிரிக்கு மட்டும்தான் அந்த பள்ளி நிர்வாகம் கொடுத்து வீட்டு உரிமையாளரிடம் கொடுக்க சொன்னார்கள் என்று சொன்னால், சரிதான். பள்ளி நிர்வாகம் எதிரிக்கு மட்டும்தான் வீட்டை வாடகைக்கு விட்டது என்றும், எதிரியானவருக்கு என்னை தெரியும் என்பதால் அந்த வீட்டில் என்னையும் தங்க வைத்துக்கொண்டார் என்று சொன்னால், சரியல்ல. அந்த வீட்டின் வாடகை தொகையானது எனது சம்பளத்தை உள்ளடக்கியதா அல்லது தனியாக வீட்டு வாடகை கொடுப்பார்களா என்றால், தனியாகதான் கொடுப்பார்கள். புதுக்கோட்டையில் South spring international school –ல் உள்ள என்னுடைய பணிப்பதிவேடு, பணிசம்பந்தமாக வழங்கப்பட்ட பதிவேடுகள் ஆகியவற்றை வரவழைத்து பார்த்தால் அந்த வீடானது யாருக்கு பள்ளி நிர்வாகம் கொடுத்தது தெரியவரும் என்று சொன்னால், சரிதான்.

5. வழக்கு காசோலையை யார் பூர்த்தி செய்தார் என்றால், எதிரி ஆவார். செலானை யார் பூர்த்தி செய்தார் என்றால், நான் தான் பூர்த்தி செய்தேன். செலானில் Lacks என்றும், காசோலையில் Lacks என்று இரண்டும் ஒன்றாக இருக்கிறது என்று சொன்னால், சரிதான்.

6. எதிரியானவர் எந்த தேதியில் என்னிடம் கடன்கேட்டார் என்றால், எனக்கு ஞாபகம் இல்லை. எவ்வளவு கடன் கேட்டார் என்றால், ரூ.4,00,000/– ஆகும். எதற்காக கடன் கேட்டார் என்றால், அவரின் சொந்த தேவைக்காக கேட்டார்.

என்ன சொந்த தேவைக்காக கேட்டார் என்றால், அவரின் குடும்ப செலவு என்றுதான் சொன்னார். நான் எதிரியின் வீட்டிற்கு சென்று விருந்து சாப்பாடு சாப்பிடும் பழக்கம் உண்டு என்று சொன்னால், இல்லை.

7. நான் எதிரியானவருக்கு என் தந்தையிடம் இருந்து ரூ.4,00,000/- ரூபாய் கையிருப்பாக வாங்கி அதை எதிரியிடம் கொடுத்துவிட்டேன். அந்த ரூ.4,00,000/- ரூபாய் சேமிப்பு பணம் ஆகும். அது வீட்டில் சேமித்து வைத்த பணம் ஆகும். ரூ.50,000/- க்கு மேல் பணப்பரிவர்த்தனை செய்யவேண்டும் என்றால், அதை வங்கியின் மூலம் தான் பரிவர்த்தனை செய்யவேண்டும் என்ற விபரம் தெரியுமா என்றால், தெரியும். அப்படி இருக்கையில் நான் ஏன் எதிரிக்கு ரொக்கமாக கையில் பணம் கொடுத்தேன் என்றால், எனக்கு அவர் பழக்கம் என்பதால் கொடுத்தேன். எதிரிக்கு நான் பணம் கொடுக்கவில்லை என்றும், அப்படி எந்தவொரு சம்பவமும் நடக்கவில்லை என்றும் நான் பொய்யாக சொல்லுகிறேன் என்று சொன்னால், சரியல்ல. நான் இந்த ரூ.4,00,000/- ஆனது என்னுடைய தந்தையின் சேமிப்பு பணம் என்பது என்ற விபரத்தை நான் என்னுடைய புகார் மனு, நிரூபணவாக்குமூலம் , வழக்கறிஞர் அறிவிப்பு ஆகியவற்றில் கூறியுள்ளேனா என்றால், எனக்கு ஞாபகம் இல்லை. நான் ரூ.4,00,000/- பணம் கொடுக்காததால்தான் இந்த விபரத்தினை நான் என்னுடைய புகார் மனு, நிரூபணவாக்குமூலம் , வழக்கறிஞர் அறிவிப்பு ஆகியவற்றில் கூறவில்லை என்று சொன்னால், சரியல்ல.

8. எதிரியானவர் என்ன தேதியில் என்னிடம் கடன் பெற்றார் என்றால், 22.07.2025 ஆகும். எந்த நேரத்தில், எந்த இடத்தில் வைத்து கடன் பெற்றார் என்றால், பட்டுக்கோட்டை தேரடி தெருவில் உள்ள ஆசை பால் நிலையத்தில் 11.00 மனியளவில் எதிரியிடம் கடனாக பணம் கொடுத்தேன். நான் எதிரிக்கு கடன் கொடுத்த தேதியன்று என் புகார் மனுவில் நான் முகவரியாக குறிப்பிட்டுள்ள விலாசத்தில் நான் வசித்து வரவில்லை என்று சொன்னால், சரிதான். நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியபோதும் அந்த விலாசத்தில் நான் வசித்து வரவில்லை என்று சொன்னால், சரிதான். அதைப்போல் நான் புகார்மனு தாக்கல் செய்யும்போது, அந்த விலாசத்தில் நான் வசித்து வரவில்லை என்று சொன்னால், சரிதான். நான் சத்தியபிரமானம் எடுக்கும்போதுகூட அந்த விலாசத்தில் வசித்துவரவில்லை என்றும், அதனால், என்னுடைய புகார், சாட்சியம் ஏற்றுக்கொள்ளகூடியது அல்ல என்றும், அதனால், நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு செல்லத்தக்கது அல்ல என்று சொன்னால், சரியல்ல. நான் கடன் கொடுத்த தேதி, நேரத்தில் எதிரியானவர் திண்டிவனம், DMI st. joseph global என்ற தனியார் பள்ளியில் வேலை பார்த்துவந்தார் என்று சொன்னால், சரியல்ல.

9. வழக்கு காசோலையில் குறிப்பிட்டுள்ள மாதத்தில் 0 என்று இருந்த number –ஐ 9 ஆக Material Alter செய்யப்பட்டது என்று சொன்னால், சரியல்ல. எதிரிக்கு நான் கடன்கொடுக்கவில்லை என்றும், அதனால், எதிரியானவர் காசோலை கொடுக்கவில்லை என்றும், அதனால்தான் காசோலையில் இவ்வளவு குழப்பம் ஏற்பட்டது என்று சொன்னால், சரியல்ல. எதிரி கையொப்பம் மட்டும் இட்ட இரண்டு காசோலையை நான் எடுத்து சென்றுவிட்டேன் என்றும், அதில் ஒன்றை வைத்து நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. எதிரியானவர் எனக்கு வங்கி மூலம் பணம் அடிக்கடி அனுப்பியுள்ளார் என்றும், ஆனால் நான் எதிரிக்கு பணம் ஏதும் அனுப்பவில்லை என்பதால்தான் நான் ரொக்கமாக கையில் கொடுத்தேன் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல. எதிரியானவர் எனக்கு பொருள் அளவில் எனக்கு உதவி செய்துள்ளார் என்றும், எதிரியின் குழந்தையின் நான்கு கிராம் செயினை எனக்கு கொடுத்து உதவியுள்ளார் என்று சொன்னால், சரியல்ல. எதிரியிடம் நான் மீண்டும் பணம் உதவி கேட்டபோது, எதிரியானவர் தற்போது வேலையில்லாமல் இருந்து வருகிறேன் என்று கூறினார் என்றும், அதனால், எதிரியானவர் காசோலையை கையொப்பம் மட்டும் இட்டு வைத்துள்ளார் என்ற விபரத்தினை அறிந்து கொண்டு நான் அவருக்கு தெரியாமல் இரண்டு காசோலையை திருடிவிட்டேன் என்றும், அதில் ஒன்றை வைத்து நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல.

10. எனது அண்ணன் பெயர் என்னவென்றால், வீரமணி ஆவார். அவர் வங்கி கணக்கிற்கு எதிரியானவர் பணம் அனுப்பியுள்ளாரா என்றால், நான் எனது அண்ணனுடன் தொடர்பில் இல்லை. கூட்டுக்குடும்பமாக யார் யார் எனது வீட்டில் இருக்கிறோம் என்றால், நான், என் மனைவி, என் தந்தை, என் தாய் மற்றும் எனது தம்பி ஆகும். ஹரிதாஸ் என்வர் யார் என்றால், தேரடிதெருவில் பால் கடை வைத்துள்ளார். ஹரிதாஸ் என்பவருக்கு எதிரி பணம் அனுப்பினாரா என்றால் எனக்கு தெரியாது. எதிரி ஹரிதாஸ்க்கு அனுப்பிய பணம் எனக்கு அனுப்பியதா அல்லது ஹரிதாஸ்க்கு அனுப்பியதா என்ற விபரத்தினை ஹரிதாஸ் என்பவரை விசாரித்தால் தெரியும் என்று சொன்னால், சரிதான். எனக்கும் எனது சகோதரர் வீரமணிக்கும் எப்போது இருந்து தொடர்பு இல்லை என்றால், நான் 2014 ஆம் ஆண்டு கல்லூரி படிக்கும்போதே இல்லை.

11. புதுக்கோட்டையில் South spring international school–ல் இருந்து நானும் எதிரியும் ஒன்றாகதான் வேலையை விட்டு வந்தோமா என்றால், இல்லை,எனக்கு பான் சேக்கர்ஸ் பள்ளியில் வேலை கிடைத்ததால் நான் முன்பே வேலையை விட்டு வந்துவிட்டேன். நான் விநாயகா மேல்நிலையப்பள்ளியில் பணியாற்றியபோது அங்கு எவ்வளவு சம்பளம் என்றால், ரூ.10,000/– ஆகும். அதில் சேமிப்பு எவ்வளவு இருக்கும் என்றால்,

செலவு ரூ.2,000/- த்தை போக ரூ.8,000/- சேமிப்பு ஆகும். நான் வீட்டில் இருந்து சென்று வருவேனா அல்லது பள்ளியில் தங்கியிருப்பேனா என்றால், பள்ளியில் தங்கியிருப்பேன், அங்கு இரவு மற்றும் பகல் நேரத்தில் எனக்கு உணவு கொடுப்பார்கள், அதுபோக ஒரு வாரத்திற்கு எனக்கு ரூ.100 கொடுப்பார்கள். புதுக்கோட்டையில் South spring international school-ல் நான் ஒரு வருடம் வேலை பார்த்தேன். அங்கு எவ்வளவு சம்பளம் என்றால், ரூ.15,000/- ஆகும். அதில் சேமிப்பு எவ்வளவு இருக்கும் என்றால், செலவு ரூ.5,000/- த்தை போக ரூ.10,000/- சேமிப்பு ஆகும். எனக்கு 12 மாதங்களுக்கும் சம்பளம் உண்டா என்றால், உண்டு. கோடைவிடுமுறையிலும் சம்பளம் உண்டு. அப்படியென்றால், வருட சேமிப்பாக ரூ.1,00,000/- ம்தான் வரும் என்றும், ரூ.4,00,000/- கொடுக்கம் அளவிற்கு என்னிடம் சேமிப்பு இல்லை என்று சொன்னால், நானும் எனது தந்தையும் சேமித்துதான் ரூ.4,00,000/- ரூபாயை கொடுத்தோம். நானும் எனது தந்தையும் சேமித்துதான் ரூ.4,00,000/- ரூபாயை கொடுத்தோம் என்ற விபரத்தினை எனது புகார்மனு, நிரூபணவாக்குமூலம், வழக்கறிஞர் அறிவிப்பு ஆகியவற்றில் சொல்லியுள்ளேனா என்றால், சொல்லவில்லை. நான் வழக்கு தாக்கல் செய்யும்போது தூய்மையான கரங்களை கொண்டு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றும், பல பொய்யான சங்கதிகளை கொண்டு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால், சரியல்ல. இவ்வழக்கு தள்ளுபடி செய்யவேண்டியது என்று சொன்னால், சரியல்ல.

**முடிக்கப்பட்ட நேரம் 04:10 PM**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/-திரு. மா. விசால் ஆனந்த்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், (நடுவர் நிலை)
பட்டுக்கோட்டை.